**செய்தி வெளியீடு எண்–572** **நாள்–16.7.2008**

## பேரூராட்சிகள் துறை புத்தகங்கள் வெளியீட்டு நிகழ்ச்சி

சுனாமியால் பாதிக்கப்பட்ட 19 பேரூராட்சிகளில் செயல்படுத்தப்பட்டுவரும் வாழ்வாதார செயல்பாடுகள் மற்றும் திடக்கழிவு மேலாண்மை திட்ட செயல்பாடுகள் குறித்த இரு புத்தகங்கள் தலைமை செயலகத்தில் **இன்று (16.7.2008) மாண்புமிகு ஊரக வளர்ச்சி மற்றும் உள்ளாட்சித் துறை அமைச்சர் திரு.மு.க.ஸ்டாலின் அவர்களால் வெளியிடப்பட்டது.**

இப்புத்தகங்களை கிள்ளை, பரங்கிப்பேட்டை, மரக்காணம், கோட்டகுப்பம், மாமல்லபுரம் மற்றும் சோழிங்கநல்லூர் பேரூராட்சி தலைவர்கள் பெற்றுக் கொண்டனர்

சுனாமி புனரமைப்பு திட்டங்களின் கீழ் சுனாமியால் பாதிக்கப்பட்ட பேரூராட்சிகளுக்கு மொத்தம் ரூ.76.98 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டுள்ளது. இதில் ஆசிய வளர்ச்சி வங்கி நிதி உதவியின் சுனாமி அவசர கால உதவி திட்டத்தில் 5 கடலோர மாவட்டங்களில் உள்ள 19 பேரூராட்சிகளில் ரூ.60.84 கோடி மற்றும் உலக வங்கி நிதி உதவியின் அவசர கால சுனாமி புனரமைப்பு திட்டத்தில் 6 கடலோர மாவட்டங்களான காஞ்சிபுரம், கடலூர், விழுப்புரம், நாகப்பட்டிணம், கன்னியாகுமரி மற்றும் தூத்துக்குடியில் உள்ள 18 பேரூராட்சிகளில் ரூ.16.14 கோடி அளவிலான பல்வேறு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது.

சுனாமி அவசர உதவி திட்டத்தின் கீழ் ஆழிப்பேரலையால் பாதிக்கப்பட்ட மக்களின் வாழ்வாதாரங்களை புனரமைக்கவும், மற்றும் பழுதடைந்த சாலைகள் கட்டிடங்கள், குடிநீர், சுகாதாரம், திடக்கழிவு மேலாண்மை உள்கட்டமைப்பு பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளன. இதே போன்று, அவசரகால சுனாமி புனரமைப்பு திட்டத்தின்கீழ் 18 பேரூராட்சிகளில் உள்ள சுனாமியால் பாதிக்கப்பட்ட 57 குடியிருப்புகளில் இணைப்புச் சாலைகள், தெருவிளக்குகள், வீடுகளுக்கு மின் இணைப்புகள் வழங்குதல், பொது உபயோக கட்டிடங்களான சமுதாயக் கூடங்கள், அங்கான்வாடி, நூலகம், சுயஉதவிக்குழு கட்டிடங்கள், சமையலறை கட்டிடங்கள், பேரூந்து நிழற்கூடங்கள் மற்றும் மயான கொட்டகை போன்ற அத்தியாவசியமான அடிப்படை வசதிகள் செய்யப்பட்டு வருகின்றன. இப்பணிகள் 90 சதவீதம் முடிக்கப்பட்டுள்ளன.

இப்புத்தகங்களில் சுனாமியால் பாதிக்கப்பட்ட பகுதிகளில் மேற்கொள்ளப்பட்டு வரும் செயல்பாடுகளின் உண்மை நிலையினை பிரதிபலிக்கும் வகையில் நிழற்படத்துடனல் விளக்கப்பட்டுள்ளதால் அனைத்து செயல்படுத்தும் அதிகாரிகளுக்கும், இத்திட்டத்தின் பங்குதாரர்களுக்கும், பயிற்சியாளர்களுக்கும் பயன்படும் வகையில் உள்ளது

**வாழ்வாதார செயல்பாடுகள் மற்றும் வெற்றிப் பாதைகள்**

இப்புத்தகத்தில் சுனாமியால் மிகவும் பாதிக்கப்பட்ட 19 பேரூராட்சி பகுதிகளில் உள்ள மக்களுக்கு வாழ்வாதாரம் அளிக்கும் பொருட்டு ரூ.12.44 கோடி ஒதுக்கீடு செய்யப்பட்டு ரூ.12.28 கோடி செலவு செய்யப்பட்டுள்ளது. இதில் முக்கியமாக 29736 உறுப்பினர்கள் அடங்கிய 1648 சுய உதவிக் குழுக்களுக்கு சுழல் நிதி மானியமாக ரூ.30,000/– வழங்கப்பட்டுள்ளது. 870 உடல் ஊனமுற்ற நபர்களுக்கு தலா ரூ.10,000/– வீதம் மானியமாக பொருளாதார உதவி அளிக்கப்பட்டுள்ளது. 5987 உறுப்பினர்கள் அடங்கிய 347 சுய உதவிக் குழுக்களுக்கு பொருளாதார செயல்பாடுகளுக்காக குறைந்த பட்சம் மான்யம் ரூ.50,000/–மும் அதிகபட்சமாக ரூ.2.50 லட்சமும் அளிக்கப்பட்டுள்ளது. உப்பளம், சானிட்டரி நாப்கின், கோரை கைவினை பொருட்கள், மூங்கில் கைவினை பொருட்கள், களிநண்டு வளர்த்து கொழுத்தல், கடல் சிப்பி கைவினை பொருட்கள் மற்றும் குடை பனை நார் கைவினை பொருட்கள் போன்ற இணைப்பு செயல்பாடுகளை நிழற்படத்துடன் இதில் விளக்கப்பட்டுள்ளது. இதில் சில செயல்பாடுகளுக்கு சென்னையிலுள்ள புகழ்பெற்ற மத்திய அரசு நிறுவனமான தேசீய ஆடை நவீன வடிவமைப்பு நிறுவனம் மூலம் சிறப்பு திறன் பயிற்சி அளிக்கப்பட்டுள்ளது. மேலும் 300க்கு மேற்பட்ட இளைஞர்களுக்கு டாக்டர்.ரெட்டீஸ் லேப் நிறுவனம் மூலம் வேலை வாய்ப்பிற்கான பயிற்சி அளிக்கப்பட்டு 90 சதவீத நபர்கள் வேலைவாய்ப்பு பெறப்பட்டுள்ளனர். இதில் 87 தன்னார்வ தொண்டு நிறுவனங்களும் 30க்கு மேற்பட்ட வங்கிகளும் பங்கு பெற்றுள்ளனர்.

இப்புத்தகத்தில் விவரிக்கப்பட்டுள்ளன சுய உதவிக்குழுக்களின் மிக சிறந்த பொருளாதார முன்னேற்றத்திற்கான வெற்றி பாதைகளை மேற்கோளாக எடுத்துக் கொண்டு மற்ற சுய உதவிக்குழுக்களும் இது போன்ற செயல்களில் ஈடுபட ஊக்குவிக்கும்.

**திடக்கழிவு மேலாண்மை செயல்பாடுகள்**

பேரூராட்சி பகுதிகளில் சுற்றுச் சூழல் சுகாதாரத்தை பாதுகாக்கவும், பேரூராட்சியினை தூய்மையாக்கும் பொருட்டும் திடக்கழிவு மேலாண்மைத் திட்டத்தின் கீழ் ரூ.6.75 கோடி மதிப்பீட்டில் பணிகள் 5 மாவட்டங்களிலுள்ள சுனாமியால் மிகவும் பாதிக்கப்பட்ட 18 பேரூராட்சிகளில் செயல்பட்டு வருகின்றன. இத்திட்டம் குறித்து மக்களிடையே விழிப்புணர்வு ஏற்படுத்தி பிரச்சார இயக்கங்கள் மூலம் கையாளப்பட்டு மக்களிடையே சுகாதாரமான திடக்கழிவு மேலாண்மை முறைகளை கையாளும் வகையில் மாற்றங்கள் ஏற்படுத்தப்பட்டுள்ளது. இதில் சிறிய ரக லாரிகல், ஆட்டோக்கள், டிராக்டர், டிராக்டர் இழுப்பாண்கள், கொள்கலன்

தூக்கும் வாகனம் போன்ற 30 வாகனங்கள் வழங்கப்பட்டுள்ளது. மேலும் இத்திட்டத்தின் கீழ் 13 உர பூங்காக்கள் அமைக்கப்பட உள்ளன. இத்திட்டத்தின் கீழ் வீடுகளிலேயே குப்பைகளை மக்கும் குப்பை, மக்காத குப்பைகளாக தரம் பிரித்து அவைகளை தனித்தனியாக சேகரித்து மக்கும் குப்பைகளை உரம், மண்புழு உரம், மண்புழு திரவம் போன்ற உரகலவைகள் உபத்தி செய்யப்படுகிறது. மக்காத குப்பைகளை வகைபடுத்தப்பட்டு பிளாஸ்டிக் கழிவுகளை மறுசுழற்சி மூலம் பிளாஸ்டிக் பொருள்களாக தயாரிக்க பயன்படுத்தப்படுகிறது.

இப்புத்தகத்தில் தரங்கம்பாடி பேரூராட்சியில் சீரிய முறையில் செயல்படுத்தப்பட்டு வரும் வெற்றி பாதைகள் மேற்கோளாக காட்டப்பட்டுள்ளது. இது அனைத்து பேரூராட்சிகளுக்கு முன் மாதிரியாக கருதும் வகையில் அமைந்துள்ளன. திடக் கழிவு மேலாண்மை பணிகளை செய்து வரும் சுய உதவி குழுக்களுக்கு பிளாஸ்டிக் கழிவுகளை மறு சுழற்சி செய்து பிளாஸ்டிக் பொருட்கள் தயாரிக்கும் தொழிலினை ஊக்க படுத்தும் வகையில் பயிற்சி அளிக்கப்பட்டு வருகிறது. இதன் மூலம் சுய உதவிக் உறுப்பினர்களுக்கு நிலைத்த மற்றும் நீடித்த வருவாய் பெற வழிவகை செய்யப்பட்டுள்ளது.

இத்திட்டத்தினை சிறப்பாகவும், அதிவேகமாகவும் செய்து வரும் பேரூராட்சி தலைவர்களையும், அதிகாரிகளையும் மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பாராட்டு தெரிவித்தார்.

இந்நிகழ்ச்சியில் , நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை முதன்மை அரசு செயலர் திரு.கே.தீனபந்து,இ.ஆ.ப., அவர்கள், பேரூராட்சிகளின் ஆணையர் டாக்டர்.கே.கோபால்,இ.ஆ.ப., அவர்கள் பேரூராட்சி துறையின் உயர் அலுவலர்கள் ஆகியோர் பங்கேற்றனர்.

வெளியீடு—இயக்குநர், செய்தி மக்கள் தொடர்புத்துறை, சென்னை—9.